**தலைப்பு 11 – நிதி ஆணைக்குழு அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 29 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வுச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் நிதி ஆணைக்குழு அலுவலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 28 ஆம் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிறுவனத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக்கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழு அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கப்படும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவு என்பவற்றின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதி ஆணைக்குழு அலுவலகத்தால் முன்னைய ஆண்டிற்காக நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என கூற முடியாதிருந்தது.

(ஆ) நிதி ஆணைக்குழு அலுவலகத்தால் ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டு தரப்பட்டுள்ளன.

**அவதானிப்பு**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 13.6 ஆம் உப பிரிவு | விழா முற்பணம் 12 மாத காலப்பகுதியின் போது ஒரு தடவை மாத்திரம் வழங்கப்பட வேண்டிய போதிலும் ஒவ்வொன்றும் ரூபா 10,000 தொகையான விழா முற்பணங்கள் 2018 பெப்ரவரி 02 மற்றும் 2018 திசெம்பர் 18 இல் ஒரு உத்தியோகத்தரிற்கு இரண்டு சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்தது. | விழா முற்பணங்கள் 12 மாத காலப்பகுதியின் போது ஒரு தடவை மாத்திரம் வழங்கப்பட வேண்டும். | ஒரு ஆண்டு காலப்பகுதியின் போது தவறுதலாக இரண்டு தடவைகள் விழா முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் எதிர்காலத்தில் அத்தகைய தவறுகளை தவிர்ப்பதற்கு உத்தியோகத்தர்களிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது என பணிவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். |
| (ஆ) அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.2.2 ஆம் பந்தி | தேசிய போட்டிக் கேள்வியின் கீழ் கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்படுகின்ற ஆகக் குறைந்த காலப்பகுதி 21 நாட்களாக காணப்பட்ட போதிலும் ஆணைக்குழுவின் புதிய அலுவலகக் | தேசிய போட்டிக் கேள்வியின் கீழ் கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு வழங்கப்படுகின்ற ஆகக் குறைந்த காலப்பகுதி 21 நாட்கள் | ஆரம்ப நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் புதிய கட்டிடத்திற்கு அத்தியாவசியமான விடயங்களாக காணப்பட்ட மின்தூக்கியை உடனடியாக நிறுவுவதற்கும் எஸ்ரீபி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கட்டிடத்திற்கான 02 பயணிகள் மின்தூக்கிகளை நிறுவுவதற்காகவும் நீரகற்றல் முறைமைக்காகவும் முறையே ரூபா 8 மில்லியன் மற்றும் ரூபா 3 மில்லியன் தொகையான பெறுகைகள் தொடர்பான கேள்வி கோரலிற்காக ஒவ்வொன்றிற்கும் 15 நாட்கள் மாத்திரமே வழங்கப்பட்டிருந்தன. | ஆகும். | முறைமையை ஸ்தாபிப்பதற்கும் தேவைப்பாடு காணப்பட்டதால் 15 நாட்கள் வழங்கப்பட்டிருந்தன. அத்தகைய குறைபாடுகளை தவிர்க்கும் வகையில் செயற்படுவதற்கு உத்தியோகத்தர்களிற்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. |
| (இ) | பொது நிர்வாக சுற்றறிக்கைகள் ------------------------------- | சுற்றறிக்கைகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும. | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை |
| | 2018 சனவரி 24 ஆம் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | (i) ஒட்டுமொத்தப் பதவியணியினருடன் குறிப்பாக கிடைக்கக்கூடிய பொறுப்புக்கள் தொடர்பான ஆற்றல்களிற்கும் (competencies) கடமைகளின் செயலாற்றலில் வெற்றிகளை அடைந்து கொள்வதற்காக காணப்பட வேண்டிய ஆற்றல்களிற்கும் இடையேயான இடைவெளியினை இனங்காண்பதற்கு பொருத்தமான முறைமையொன்று தயாரிக்கப்படாமை | | (i) வேலை ஆய்வுகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஆரம்பச் செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன. |
| | | (ii) ஆற்றல்களிற்கு இடையேயான இடைவெளியினை இழிவுபடுத்துவதற்காக நிறுவனத்திற்காக குறிப்பாக மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்படாமை | | (ii) மனித வளங்கள் அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| | | (iii) மனித வளங்கள் அபிவிருத்தி திட்டத்தினுள் | | (iii) இது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு 2019 |

| | | |
|---|---|---|
| | ஆகக்குறைந்தது 12 மணித்தியாலத்திற்கு குறையாமல் ஒவ்வொரு பதவியணி உறுப்பினரிற்குமான பயிற்சிக்கான வாய்ப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும. 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 85 ஆக காணப்பட்ட போதிலும் உள்ளபடியான நிரந்தரப் பதவியணியினர் 52 உறுப்பினர்களை உள்ளடக்கியிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டின் போது பயிற்சி வாய்ப்புக்களிற்கான நிதியேற்பாடு 07 உத்தியோகத்தர்கள் அல்லது 13 சதவீதத்திற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | ஆம் ஆண்டில் அதற்கிணங்க செயற்படுவதற்காக குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டில் நிதிச் செயலாற்றல் கூற்றில் ஏனைய வருமானமற்ற பெறுவனவுகளின் கீழ் ஏனைய அறிவுறுத்தல்களிற்காக ஆணைக்குழு அலுவலகத்தால் சேகரிக்கப்பட்ட ரூபா 13,208,297 தொகையான உள்ளபடியான மீதியை குறிப்பிடுவதற்குப் பதிலாக நிதிச் செயலாற்றல் கூற்றில் அது ரூபா 13,135,043 தொகையாக ரூபா 73,254 தொகை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் உண்மையான மற்றும் சரியான தகவல்கள் உள்ளடக்கப்பட வேண்டும். | வருமானக் குறியீடு 20.03.99 இன் கீழ் சேகரிக்கப்பட்ட ரூபா 73,254 தொகை தவறுதலாக நிதிக்கூற்றின் ஏசீஏ-01 படிவத்தில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. இதனை சீர்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| இரண்டு மூலதன செலவின விடயங்களிற்காக மிகை நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 288,600,000 தேறிய நிதிறேற்பாட்டில் ரூபா 195,252,687 தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டதன் காரணமாக ரூபா 93,347,313 தொகை மீதியாக காணப்பட்டது. சதவீத ரீதியாக இது தேறிய நிதியேற்பாட்டில் 32 சதவீத தொகையாக காணப்பட்டது. | மதிப்பீடுகள் சாத்தியமானளவு சரியானதாக தயாரிக்கப்பட வேண்டும். | தெகிவளை – கல்கிசை மாநகர சபையின் வாகன திருத்துமிடத்தில் அலுவலக வாகனங்களின் திருத்தங்களை மேற்கொள்வதன் காரணமாகவும் வாகனங்களின் பாரியளவு திருத்தங்கள் மேற்கொள்ளப்படாதமை காரணமாகவும் ஒரு செலவின விடயத்தில் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன் அலுவலக கட்டிட நிர்மாணம் தொடர்பான கொடுப்பனவு செயற்பாடுகளிற்காக ரூபா 82.8 மில்லியன் தொகையான விலைப்பட்டியல்கள் சமுர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பொதுத் திறைசேரியிடமிருந்து கட்டுநிதி பெறப்படாததன் காரணமாக ஏனைய செலவின விடயத்திலும் நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட்டிருந்தன. |

### 3. மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது ஆணைக்குழு அலுவலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர்களின் எண்ணிக்கை பின்வருமாறு இருந்தது. அதற்கிணங்க சிரேஷ்ட நிலையிலுள்ள 6 வெற்றிடங்களும் இரண்டாம் நிலையிலுள்ள 17 வெற்றிடங்களும் உள்ளடங்கலாக 33 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் போது இவ் வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மீளாய்வு செய்வதற்கு சாத்தியமற்றிருந்தது. | உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மீளாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பொது நிர்வாக அமைச்சிடம் காலத்திற்கு காலம் வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அனைத்து வெற்றிடங்களும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.<br><br>அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரச அலுவலகங்களில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்பட்டிருந்த போதிலும் பதவிகளிற்கு போதுமான எண்ணிக்கையான உத்தியோகத்தர்களை பெற்றுக்கொள்வதற்கு சாத்தியமற்றிருந்தது. |